1989 மார்ச் 31] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

நன்றாக இந்த கிராமங்களைப் பற்றி அறிந்து இருக்கிறவர்கள் தயவுசெய்து அந்த கிராமங்களுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமையை மறந்து விடாதீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒன்றைச் சொன்னார்கள், நான் ஒரு பெண்ணை அலங்கரித்து அனுப்புகிறேன், திலகம் இட்டு அனுப்புங்கள் என்று சொன்னார்கள். திலகம் இடவில்லை என்ற காரணத்திற்காக அந்த மருங்காபுரி மக்களுக்கு நீங்கள் மாற்றாந்தாய் மனப் பான்மை காட்டமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம் இருக் கிறது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த ஒரு நிமிடத்தையும் நான் வீணாக்க விரும்பவில்லை. தயவு செய்து நீர்ப்பாசன ஏற்பாடுகளுக்காக 3 ஊராட்சிகளில் சில ஏரிகளை நவீனப் படுத்தி அதிலே நீரைத் தேக்கி இரண்டு போக நஞ்சையாக அதை மாற்றி விவசாய உற்பத்திக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வளநாடு, துலுக்கம் பட்டி ஏரியா, தெத்தூர் போன்ற இடங்களிலெல்லாம் ஏறத் தாழ குறிஞ்சி நிலங்கள்தான் உள்ளன. மலையைச் சார்ந்த இடங்கள். மலையிலே பெய்கின்ற தண்ணீரெல்லாம் வீணாகச் சென்று விடுகிறது. . . (மணியடிக்கப்பெற்றது)

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர்கள், மணி யடித்தவுடன் வகுப்பைவிட்டு வெளியேறுவதுதான் முறை. (சிரிப்பு) அடுத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்

7. அரசினர் தீர்மானம்
விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மா னத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக் கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை 1–4–89 அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை 1–4–1989 காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.